யாழ்ப்பாண
அசம்பாவிதங்கள்

339.P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

15

# யாழ்ப்பாண அசம்பாவிதங்கள் – 81

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

" .. ......இந்தக் காலப் பகுதியில் நடந்த சம்பவங்களினுல் பல கோடி ரூபா வரை பொருட் சேதங்களும், ஆட்சேதங்களும் ஏற்பட்டுள்ளதாக அறியப்படு கின்றது. இந்த இழப்புகளை விட இதன் மூலமாகத் தமிழ் பேசும் இனம் பெற்ற அவ மதிப்பு வெகு எளிதாக மறக்க முடியாததாகும்...... "

339.6

## தமிழினத்திற்கு வழி என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண அசம்பாவிதங்கள் — 81

முதலாம் பதிப்பு: ஜூலை 1981.

எழுதியவர்: அரிச்சந்திரன்.

அச்சுப்பதிப்பு: ஸ்ரீ பார்வதி அச்சகம், யாழ்ப்பாணம்.

விலை: ரூபா 7-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரி
மாநகர ச. சே
யாழ்ப்பாணம்

# யாழ்ப்பாண அசம்பாவிதங்கள் — 81

## பயங்கர இரவு — முதலாம் நாள்

31-05-1981 ஆம் திகதிதான் இலங்கை மக்கள் வெட்கப் பட்டுக் கொள்ள வேண்டிய அந்தச் சம்பவம் யாழ்ப்பாண மாவட்டத்தில் மீண்டும் தொடங்கிற்று. வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியில் ஞாயிற்றுக்கிழமை இரவு தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலுக்கான பிரசாரக்கூட்டம் நடந்துகொண்டிருக்கையில் பாதுகாப்பிற்குப் பொறுப்பாயிருந்த நான்கு பொலிசாரின் மீது இனந்தெரியாத சிலர் துப்பாக்கிப் பிரயோகம் செய் தனர். பொலிஸ் சார்ஜன்ட் திரு. புஞ்சிபண்டா துப்பாக் கிச் சூட்டின்பின் உடனடியாகவே இறந்துபோனார். பலத்த காயங்களுக்குள்ளான பொலிஸ் சார்ஜன்ட் திரு. கனக சுந்தரம், கான்ஸ்டபிள்களான திரு. உஸ்மான், திரு. குண சிங்க ஆகியோர் அவசரமாக யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி யில் அனுமதிக்கப்பட்டனர். யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன், பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. மகேந்திரன் ஆகியோர் சிறிது நேரத்தின் பின் மருத்துவ மனைக்குச் சென்று காயமுற்றவர்களைப் பார்வையிட்டனர்.

சில தினங்களின் பின்னர் சார்ஜன்ட் திரு. கனகசுந்தரம் காலமானார். இச் சம்பவத்தைத் தொடர்ந்து இதன் எதி ரொலியாக ட்ரக்குகளிலும், வான்களிலும், மினி பஸ்களி லும் ஆயுதங்கள் தரித்துக் கோஷ்டி கோஷ்டியாக வந்தவர் கள் நாச வேலைகளில் ஈடுபட ஆரம்பித்தனர். நாச்சிமார் கோவிலடியிலிருந்து கடையுடைப்பு, தீ வைப்பு, சூறை யாடல் ஆகிய அராஜக வேலைகள் ஆரம்பமாயின. வீதி களிற் காணப்பட்ட வாகனங்கள் இவர்களால் கேள்விமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின்றித் தீக்கிரையாக்கப்பட்டன. ஒன்றுமறியாத அப்பாவி மக்கள் வழி வழியே தாக்குதல்களுக்குள்ளாகி விரட்டப் பட்டனர்.

வண்ணூர்பண்ணை நாச்சிமார் கோவிற் புதிய தேர், அமைந்துள்ள முட்டிக்குத் தீ மூட்டப்பட்டபோதிலும் அத் தீ உடனடியாகவே அணைக்கப்பட்டுவிட்டது. கோயிற் கோபுரத்தைச் சிதைக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. கோவிலினுள்ளே பிரவேசித்தவர்கள் அங்கிருந்த படங்கள், கண்ணாடிகள், வாகனங்கள் என்பனவற்றை மிலேச்சத்தன மாக நொருக்கியெறிந்தனர். கோவிலின் மஞ்ச மண்டபத் தின் கதவு உடைக்கப்பட்டிருந்த போதிலும் மஞ்சத்திற்கு எவ்வித சேதமும் உண்டாகவில்லை.

கோவிலைச் சுற்றியுள்ள பல வீடுகள் உடைக்கப்பட்டு, அவற்றோடு வேலிகளும் தீக்கிரையாக்கப்பட்டன. சூறை யாடல் தாராளமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது. வீடொன்றிலிருந்த முப்பத்தீராயிரம் ரூபாப் பணமும் நகை களும் தீ வைப்பினால் அழிந்துபோயின. நாச்சிமார் கோவி லடிப் பகுதியில் மாத்திரம் நான்கு மோட்டார் சைக்கிள் களும், இருபத்தைந்துக்கு மேற்பட்ட சைக்கிள்களும் கொழுத்தப்பட்டிருந்தன. இப் பகுதியில் ஆறு கடைகள் வரை தீக்கிரையாக்கப்பட்டன. சட்டத்தையும் ஒழுங்கை யும் நிலைநாட்டப் பொறுப்பானவர்களே இந்த மூர்க்கத்தன மான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததைக் கண்ட மக்கள் அச்சத்தின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தின் நகரப் பகுதியில் பெரிய பெரிய வியாபார நிறுவனங்களின் மீது தீப் பந்தங்களும், பெற்றோல் குண்டுகளும் வீசப்பட்டன. யாழ் பஸ் நிலையத்திற்கெதிரில் ஆஸ்பத்திரி வீதியில் இருந்து மின்சார நிலைய வீதிவரையுள்ள முப்பத்திரெண்டு கடைகளும் ஒரேயடியாக எரிக்கப்பட்டிருந் தன. மின்சார நிலைய வீதியில் நான்கு மருந்துக் கடைகளும் லோன்றி ஒன்றும் கணக்காய்வு நிறுவனமும் வேறொரு கடை யும் தீக்கிரையாக்கப்பட்டன. புதிய சந்தையில் பாட்டா பாதணிக் கடையும், புடவைக் கடையொன்றும் கொள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடிக்கப்பட்டபின் கொழுத்தப்பட்டன. இதே தினத்தில் வெளிநாட்டு மதுபானங்கள் விற்பனை செய்யும் கடையி னுள்ளே புகுந்து மதுபான வகைகளைத் திருடியும், குடித்தும் விட்டுக் கடைக்குத் தீயுமிட்டனர். வெற்று மதுபானப் போத்தல்கள் பெருமளவிற் கடையின் முன்னர் வீசியெறியப் பட்டிருந்தன.

நகரம் இப்படி ஒருபுறம் அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டிருக்கையில், ஒரு கோஷ்டி யாழ்ப்பாணப் பாராளு மன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரனின் வீட்டுக் கதவை உடைத்து உள்ளே புகுந்து அங்கு நின்ற அவரது ஜீப் வண்டியையும், அவரது நண்பரின் பேர்ஜோ-404 காரையும் தீயிட்டுவிட்டு, அவரது வீட்டிற்கும் பெற்றோல் குண்டினை வீசி எரியூட்டிற்று. இவை யாவும் இனிப் பயன்படாத வகையிலே உருவிழந்து தீக்கிரையாகிவிட்டன. திரு. யோகேஸ்வரன் தனது மனைவியுடன் மதிலேறிப் பாய்ந்து தப்பித்துக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகமும், உதயசூரியன் பத்திரிகை அலுவலக மும் துவம்சம் செய்யப்பட்டு எரிக்கப்பட்டன. கச்சேரியடி, பெரியகடை ஆகிய பகுதிகளின் வீதிகளில் நிறுத்தப்பட் டிருந்த மோட்டார் வாகனங்கள் நின்ற நின்ற இடங்களி லேயே தீ வைத்துக் கொழுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலைமையில் மாவட்ட அமைச்சின் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கட்டுப்பாட்டுக்குட் கொண்டு வந்து அமைதியை நிலைநாட்டுவதற்குத் தன்னாலான முயற்சி களைச் செய்வதில் ஈடுபட்டிருந்தார். இராணுவத்துடனும், கடற்படையுடனும் இரவிரவாகத் தொடர்புகொண்டு, தீ அணைக்கும் முயற்சிகளை அயலிலிருந்த தொண்டர்களின் உதவியோடு தீவிரமாக மேற்கொண்டார்—[1] இராணுவம் கடற்படை ஆகியவற்றைச்சேர்ந்த மூன்று பௌசர்களை வர வழைத்து அவர் தீப்பற்றிய பகுதிகளை அணைத்து அபாய நிலையைக் கட்டுப்படுத்த மேற்கொண்ட இம்முயற்சி பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபத்தினையும் அழிவினையும் தடுத்து நிறுத்தியது. அத்தோடு அவர் ஜனாதிபதியுடன் தொலைபேசி மூலம் உடனடியாகத் தொடர்பு கொண்டு யாழ்ப்பாண மாவட்டத்தின் நிலைமையை — எரியும் பிரச்சனையை வெகு தெளிவாகவும், உள்ள படியாகவும் தெரிவித்தார். யாழ்ப்பாண மாவட்டத்தின் அசம்பாவிதங்கள் பற்றி அதிகார பூர்வமாகக் கொடுக்கப் பட்ட தகவல்களின் அடிப்படையில் ஜனாதிபதி யாழ் மாவட் டத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும்படி பாது காப்பு அமைச்சுக்கு உத்தரவிட்டார். இதில் ஒரு அம்சமாக பிறிகேடியர் வீரதுங்க தாமதமின்றி 1-6-81 நள்ளிரவு 1½ மணிக்கு விமானப்படையினரின் விமானத்தில் தனியாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார்.

இதற்குப் பின்னர் கொழும்பில் ஓர் உயர்மட்ட மகா நாடு நடைபெற்றது [2] இம்மகாநாட்டிற் பிரதிப் பாது காப்பு அமைச்சர் வேரப்பிட்டிய, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கேர்ணல் சி. தர்மபால, பொலிஸ் மா அதிபர் திரு. அனு செனிவரத்ன, பிரதிப் பொலிஸ் மாஅதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். வட பகுதிக் கலவரங்கள் குறித்து இம் மகாநாட்டில் 1½ மணித்தி யாலங்கள் வரை ஆராயப்பட்டது. வடபகுதியில் அவசர காலச் சட்டத்தைப் பிரகடனப் படுத்த வேண்டிய அவசிய மில்லையென அப்பொழுது இந்த மகாநாட்டில் முடிவு செய் யப்பட்டது. நாட்டின் நிலைமையை ஆறு மணித்தியாலத் திற்கு ஒருமுறை அறிவிக்கும்படி பொலிஸ் மா அதிபர், சகல நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் இதே நேரத்தில் அறிவித் திருந்தார் என்பதனை நாம் இங்கே மனதிற் பதித்துக்கொள்ள வேண்டும்.

## இரண்டாம் நாள் — இன்னொரு பயங்கர நாள்

*1-6-1981* ஆம் திகதி இரவு யாழ்நகரிலும், மற்றும் சுற்றுப் பகுதிகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளை இராணுவத் தினர் பொறுப்பேற்றுக் கொண்டனர்—[3] வழமையாகப் பொலிஸார் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கைகளை இப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது பொலிஸாருடன் இராணுவத்தினரும் சேர்ந்து மேற்கொண்டனர். ஆயினும், எரியுண்ட யாழ்நகரம் மரண அமைதியில் மூழ்கியிருந்தது. மக்களின் நடமாட்டமின்றி யுத்தகாலத் தாக்குதல்களுக்குட்பட்ட நகரமாக யாழ்ப்பாணம் காட்சியளித்தது. பஸ் சேவைகள் நடைபெறவில்லை. பாடசாலைகளும் வங்கிகளும் கடைகளும் மூடப்பட்டிருந்தன. மிகவும் குறைந்த தொகையினரான அரசாங்க ஊழியர்களே அலுவலகங்களுக்குச் சமுகமளித்திருந்தனர். யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். மாவட்ட அபிவிருத்திச் சபையின் இறுதிக்கட்டத் தேர்தற் பிரசாரக் கூட்டங்கள் யாவற்றிற்கும் பொலிசாரால் தடை விதிக்கப்பட்டது. தேர்தற் கடமைகளில் ஈடுபடுவதற்காக 400 பொலிஸார் தென்பகுதியிலிருந்து யாழ் மாவட்டத்திற்கு வந்து சேர்ந்தனர்—[4].

இதே தினத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி, திருநெல்வேலி அலுவலகத்தில் அவசர அவசரமாகக் கூடிற்று. திரு. மு. சிவசிதம்பரம் தலைமைதாங்கிய இக் கூட்டத்தில் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் கலந்துகொண்டு, யாழ் நகரில் முன்தினம் நடைபெற்ற பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை எடுப்பது அவசியமென்பதை வலியுறுத்தி, இதற்குத் தமிழ்க் காங்கிரசின் ஒத்துழைப்பினையும் தெரிவித்துக்கொண்டு, ஹர்த்தால் நடவடிக்கைகளுக்குப் பூரண ஆதரவினைத் தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் ஊர்காவற்றுறைப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. கா. பொ. இரத்தினம், முன்னுள் செனெற்றர் திரு. சு. நடராசா ஆகியோர் கலந்துகொண்டனர். தேர்தற் பிரசாரக் கூட்டங்களிற் கலந்துகொள்வதற்காக எதிர்க் கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் குடா நாட்டிற்கு வெளியே சென்றிருந்தமையினுல் இம் மகாநாட்டிலே அவர் கலந்துகொள்ளவில்லை. இந்தக் கூட்டு மகாநாட்டின் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும், தமிழ்க் காங்கிரஸ் கட்சியினரும் இணைந்து ஒரு கூட்டு அறிக்கையினை வெளியிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாநாட்டை முடித்துக்கொண்டபின் மேற்படி இரு கட்சியினரும், யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோனைச் சந்தித்து இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் நடைபெறுதிருக்க நடவடிக்கை எடுக்குமாறும், பொலிசாரின் வெளி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த உரியவர்களைக்கொண்டு பணிப்புரைகள் வழங்குமாறும் கேட்டுக் கொண்டனர்.

பயமும் பீதியுமாக மக்கள் கலவரப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் முதல்நாளைய புகைமணம் மாறமுதலே மீண்டும் யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தீவைப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன. கடைகள் கொள்ளையிடப் பட்டபின் எரிக்கப்பெற்றன. தலைநகருக்கு வெளியே நடத்தப்படும் ஒரேயொரு தினசரிப் பத்திரிகையான — அதுவும் தமிழ்ப் பத்திரிகையான 'ஈழநாடு' பத்திரிகையின் அலுவலகம் அடித்து நொருக்கப்பட்டது. அங்கு வேலை செய்துகொண்டிருந்த ஊழியர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். அவர்களது சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பன ஓரிடத்திற் குவித்து வைக்கப்பட்டு கட்டிடத்தோடு சேர்த்து நெருப்பு வைக்கப்பட்டது. இதனால் அச்சு இயந்திரம் உட்பட அச்சகத்தின் சகல சாதனங்களும் எரிந்துபோயின. அலுவலகத்தின் உள்ளே நின்ற பத்திரிகை நிறுவனப் பணிப்பாளர்களில் ஒருவரும், உதவி ஆசிரியரும் தீக்காயங்களுக் குள்ளாயினர். நகரின் பெற்றோல் நிலையங்கள் பலாத்காரமாக உடைக்கப் பட்டு, அவற்றிலிருந்து எடுத்த பெற்றோலால் இத் தீவைப்புச் சம்பவங்கள் துரிதமாக நடைபெற்றன. இலங்கையிலேயே உன்னதமானதாகக் கருதப்படும் யாழ்ப்பாணப் பொதுசன நூல் நிலையம் 97,000 புத்தகங்களுடன் மிகக் காட்டுமிராண்டித்தனமான முறையிலே முற்றிலும் எரிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலே ஒரு கலாச்சார நிலையத்தின் இத்தகைய இழப்பு, இருபதாம் நூற்றாண்டின் அருவருப்புக்குரிய அட்டூழியம் என்பதை நீதியுள்ள மனிதர்கள் யாவருமே ஒப்புக்கொள்வர். உலக மகா யுத்த காலங்களிற்கூட இத்தகைய இழிந்த செயல் நடைபெறவில்லை என்பது இங்கு குறிப்பிடத் தக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகும். இதே விதமான கொள்ளையடித்தபின் எரியூட்டிய சம்பவங்கள் காங்கேசன்துறையிலும், சுன்னாகத்திலும் நடைபெற்றன.

இந்தச் சம்பவங்கள் நடந்துகொண்டிருந்தபோது மீன்பிடி அமைச்சர் திரு. பெஸ்ரஸ் பெரேரா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. கேர்ணல் சி. தர்மபால, பொலிஸ் மாஅதிபர் திரு, அனு செனிவரத்ன, மந்திரிசபைக் காரியதரிசி திரு. ஜீ. வீ. பி. சமரசிங்க குருநாகலை, யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர்கள் ஆகியோர் கிங்ஸ் கவுசில் தங்கியிருந்தனர். மாவட்ட அமைச்சின் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமியுடன் பிறிகேடியர் வீரதுங்காவும் காரில் இணைந்து சம்பவம் நடைபெற்ற இடங்களுக்குச் சென்று இந்த அசம்பாவிதங்களைத் தடுக்கும் முயற்சியில் மக்களின் உதவியோடு ஈடுபட்டிருந்தனர். விடிய விடிய இவர்கள் மேற்கொண்ட தீவிர முயற்சிகளின் பயனாகவே இ ந் த அபாயகரமான குழப்பங்கள் கட்டுப்பாட்டுக்குட் கொண்டுவரப்பட்டன. மூன்று பௌசர்களில் தீ அணைப்பதற்காகத் தண்ணீர் கொண்டுவருவதற்குரிய முயற்சிகளை அமைச்சின் செயலாளர் செய்வித்திருந்த போதிலும் இத்தகைய பிரயத்தனத்தினாலும் நூல்நிலையக் கட்டிடத்திற் பரவிய தீயினை அணைக்க முடியவில்லை.

மிட்டாஸ் கடைச் சந்தியிலிருந்து ஈழநாடு பத்திரிகை அலுவலகம் வரையுள்ள கடைகள் சிலவும் இன்று எரிக்கப்பட்டிருந்தன. பிள்ளையார் விலாஸ் நிறுவனத்தின் ஐந்து லொறிகளும், பேர்ஜோ கார் ஒன்றும் முற்றாக எரித்து நாசமாக்கப்பட்டிருந்தன. 1977 ஆம் ஆண்டு எரித்து அழிக்கப்பட்ட தமது சந்தையினை மாநகர சபையினர் புனர் நிர்மாணம் செய்திருந்தனர். யாழ்ப்பாண மக்கள் தங்களுடைய அன்றாட உணவுத் தேவையைப் பூர்த்தியாக்கிக் கொள்ளக்கூடிய விநியோக உறுதிபெற்ற இந்தச் சந்தை இம்முறை மீண்டும் பெற்றோல் குண்டுகளாலும், தீப்பந்தங்களாலும் தீ மூட்டி அழிக்கப்பட்டது. த ற் போ து இக்கட்டிடத்தில் எஞ்சியுள்ளவை, புகைபடிந்த வெறும் தூண்களே. நகரின் புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தையில் மூலைப் பகுதியில் அமைந்துள்ள இரண்டு புடவைக் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டபின் எரியூட்டப்பெற்றன. யாழ்ப்பாணத்தில் பொதுசன நூல் நிலையத்திற்கு அருகே உள்ள ரெனிஸ்கோட் கட்டிடம் எரிக்கப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரி வீதியில் சில கடைகளும், யாழ் புகையிரத நிலையச் சந்தியில் இரு கடைகளும், கொட்டடிச் சந்தியில் ஐந்து கடைகளும், கன்னாதிட்டியில் ஒரு நகைக் கடையும் கொள்ளையிடப்பட்டபின் நெருப்பு வைக்கப்பட்டது.

1977-ம் ஆண்டிலே யாழ்ப்பாண மாநகர சந்தையும், பல கடைகளும் எரித்து அழிக்கப்பட்டன. அப்போது தீ அணைப்புப் படையொன்றினை மாநகரசபை தனக்குச் சொந்தமாகவே வைத்திருக்குமெனில் இத்தகைய தீ விபத்துக்கள் காலத்தோடேயே தவிர்க்கப்படலாமென்ற அபிப்பிராயம் பலராலும் தெரிவிக்கப்பட்டது. இத் தீ வைப்புகள் நடந்த போது அதனைத் தணிப்பதற்கு எவ்வித மார்க்கமுமற்றுத் திண்டாடிய வேளையில் மீண்டும் மாநகரசபையினர் தீ அணைப்புப் படையில்லாமல் இருக்கின்றனரே என்ற குறை மனக்கவலையோடு பொதுமக்களால் உணரப்பட்டது.

தமிழாராய்ச்சி மகாநாட்டின் போதும் பின்னரும் அமைக்கப்பட்ட தலைவர்களினதும் அறிஞர்களினதும் சிலைகள் அழகும் கம்பீரமும் தருவதாய் விளங்கின. தமிழ்க் கலாச்சாரத்தின் பெருமையினை எல்லோருக்கும் தெரியப் படுத்திக் கொண்டிருக்கும் இச் சிலைகள் 1977 ஆம் ஆண்டு கோரமாக அலங்கோலப் படுத்தப்பட் டிருந்தன. இவை திருத்தி அமைக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் சில சிலைகள் இம்முறையும் நொருக்கப்பட்டுள்ளன.

இதே தினத்தில் நாற்பத்தாறு கடைகள் வரை சிவில் உடை தரித்த பலரால் சுன்னாகத்தில் எரிக்கப்பட்டன. சுன்னாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சந்தையில் ஒரு பகுதி முற்றாகவும், பழைய சந்தையில் எல்லாப் பகுதிகளுக்கும் தீ வைக்கப்பட்டது. அங்கிருந்த முனீஸ்வரன் கோவில் பலத்த சேதத்துக்குள்ளாக்கப்பட்டது. அவசர அவசரமாக இதனால் இப்பகுதியிலிருந்து வியாபாரிகள் கடைகளின் பொருட்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்திவிட்டு அங்கிருந்து அகன்றுவிட்டனர். மக்கள் இத்தகைய அவதியினை அனுபவித்துக்கொண்டிருந்த வேளையில் எந்த ஒரு அரசியற் தலைவரையோ, பாராளுமன்ற உறுப்பினரையோ, மாநகரசபை முதல்வரையோ, மாநகரசபை ஆணையாளரையோ யாழ் மாவட்டத்தில் பகிரங்கமாகக் காணக்கூடியதாக இருக்கவில்லை. இதே வேளையில் தேர்தற் கடமைக்காக இங்கே அனுப்பிவைக்கப்பட்டிருந்த நானூறு பொலிசாரையும் உடனடியாகத் திருப்பி அனுப்ப வேண்டுமெனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் திரு. ரி. பி. வேரப்பிட்டிய தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடந்த உயர்மட்ட மகாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது. இப்படியானதொரு முடிவெடுக்கப் பட்டமைக்கு என்ன காரணமென்பதனைப் பத்திரிகைகள் பின்வருமாறு தெரிவித்திருந்தன:-

"யாழ்ப்பாணத்தில் நடந்த குழப்பங்களுக்கு இங்கே நிரந்தரமாக இருக்கும் பொலிசார் பொறுப்பில்லை; தேர்தற் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக வெளி இடங்களிலிருந்து 400 பொலிஸ் உத்தியோகத்தர்கள் வந்திருந்தனர். அவர்களில் சந்தேகம் ஏற்பட்டிருப்பதால் அவர்களை உடனடியாக இன்று காலையே அவர்களது முன்னைய பொலிஸ் நிலையங்களுக்குத் திருப்பி அனுப்ப வேண்டுமென்று மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டிருந்தது."—5

## அவசரகால நிலையும் அதன் தொடர்ச்சிகளும்

அவசரகால நிலைமை 2-6-81 இல் இருந்து இத்தகைய நிலையின் மத்தியில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசாங்கத்தினால் பிரகடனப் படுத்தப்பட்டது. இம் மாவட்டத்தில் நடைபெற்ற சம்பவங்களை விபரிக்கின்ற செய்திகள் மீது தணிக்கை விதிக்கப்பட்டது.

இதே நாளன்று யாழ்ப்பாணம் புகையிரத நிலையச் சந்தியில் ஓர் இளைஞர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. நெல்லிப்பளைச் சந்தியிற் கூடிநின்ற இளைஞர் கூட்டத்திற்குத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதில் இருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகாயமடைந்தனர். 3-6-81 இல் திருநெல்வேலியில் நல்லூர்ப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரத்தின் அலுவலகத்தில் தங்கியிருந்த இளைஞர்கள்மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தம்பாலையைச் சேர்ந்த பாலஜோதி என்பவர் உயிரிழந்தார். கோப்பாயைச் சேர்ந்த பரமேஸ்வரன் என்னும் இளைஞரான விவ்சாய உத்தியோகத்தர், உரும்பிராயைச் சேர்ந்த சண்முகம் நடேசு ஆகியோரும் இதே தினத்தில் குரூரமாகக் கொலை செய்யப்பட்டனர். சுட்ட சுட்ட இடங்களிலேயே இவர்களின் சடலங்கள் அனுதரவாக் விடப்பட்டிருந்தன. மக்கள் இந்த இடங்களுக்குச் செல்ல முடியாமல் ஆயுதப் படையினரால் அச்சுறுத்தப்பட்டிருந்தனர். கொலையுண்டவர்கள் தத்தம் குடும்பங்களுக்கு மிகவும் பொறுப்பாக இருந்தவர்கள் என்பதும், அவர்கள் ஏதும் அறியாதவர்களாய் இருந்தார்களென்பதும் மிகவும் கவலைக்குரிய விஷயமாகும். தெல்லிப்பளையைச் சேர்ந்த கோவிந்தசாமி சண்முகராசாவும், மல்லாகத்தைச் சேர்ந்த இன்னொருவரும் இதே நாளிற் தாக்கப்பட்டுப் பரிதாபகரமாக உயிரிழந்தனர். இதே தினத்தில் ஒன்றுமறியாத பலர் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

3-6-81 இரவு ஆனைக்கோட்டைப் பழைய பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் அருள், கிருஷ்ணமூர்த்தி ஆகிய இருவரும் எவ்வித காரணமுமின்றி பொலிஸ் ஜீப்பில் ஏற்றிச் செல்லப்பட்டுப் பின்னர் கீழே இறக்கிக் கலைக்கப்பட்டு ஓடிக் கொண்டிருக்கையிற் சுடப்பட்டனர். காயங்களுடன் தப்பி ஓடியவர்கள் யாழ்ப்பாண மருத்துவ மனையில் பின்னர் அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் 3-6-81 இற்கும் 4-6-81 இற்கும் இடையே பிரயாணம் செய்த தமிழர்கள் ஆண்களும் பெண்களுமாய் அனுராதபுரத்திற்கு அடுத்தடுத்த இடங்களிற் காடையர்களினுல் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டு அவர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன, இவர்கள் தமிழராய்ப் பிறந்தார்கள் என்பதைவிட காடையர்களினுல் இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் தாக்கப்படுவதற்கு வேறு எவ்விதமான காரணமும் இருக்கவில்லை. இத்தகைய பாதுகாப்பற்ற நிலையில் பிரயாணிகள் அச்சத்துடனும், பரபரப்புடனும் தங்களுடைய பிரயாணத்தைத் தொடர்ந்தனர்.

நாடெங்கும் குழம்பிய சூழ்நிலையில் 2-6-81 இல் யாழ்ப்பாண மாவட்டத்திற் பிறப்பிக்கப்பட்ட அவசரகால நிலைமை தீவு முழுவதும் விஸ்தரிக்கப்படவேண்டிய சூழ்நிலை உருவாகியது. 4-6-81 இல் இலங்கை முழுவதும் அவசர காலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. வன்செயல்களைக் கட்டுப்படுத்த இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரி பத்திரிகைகளிற் தெரிவித்திருந்தார்—6. யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் மாலை 5 மணி முதல் காலை 6 மணி வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பிறிகேடியர் வீரதுங்க இணைப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டார். சுபாஸ் விருந்தினர் விடுதியில் இராணுவத் தலைமை நிலையம் இயங்கத் தொடங்கிற்று. இங்கேயே யாழ்ப்பாண மாவட்டத்தின் பாதுகாப்பு சம்பந்தமான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

4-6-81 அதிகாலையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம், சாவகச்சேரி திரு. வி. என். நவரத்தினம், நல்லூர் திரு. மு. சிவசிதம்பரம், மானிப்பாய் திரு. வி. தர்மலிங்கம் ஆகியோர் இராணுவத்தினரால் பாதுகாப்புக் கைதிகளாக்கப் பட்டதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறின. இவர்கள் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டுப் பின்னர் ஜனாதிபதியின் உத்தரவின்பேரில் 6 மணித்தியாலங்களின்பின் விடுவிக்கப்பட்டதாகவும் பொதுசனத் தொடர்பு சாதனங்கள் மூலமாக அறிவிக்கப்பட்டது.

## அவசரகாலச் சட்டத்தின்கீழ் நடைபெற்ற தேர்தல்

அச்சுறுத்தல்கள், நெருக்கடிகள், அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் நடுவேதான் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலை நடத்துவதென்று முடிவெடுக்கப்பட்டிருந்தது. இச் சூழ்நிலையில் தேர்தலை நடத்துவது உசிதமற்றதென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்திற்குப் பல ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டன. 9-6-81 இல் பாராளுமன்றத்திற் பேசிய காணி - காணி அபி விருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசா நாயக்க பின்வருமாறு தெரிவித்தார்:-

" பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இராணுவத் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஆகியோர் ஜனாதிபதியிடம் ஓர் அறிக்கை சமர்ப்பித்தனர். அந்த அறிக்கையில் தேர்தலை நடாத்த வேண்டாமென அவர்கள் வேண்டியிருந்தனர்.[7] ஆயினும், இந்த ஆலோசனைகள் ஜனாதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்படாமல் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்ததுபோல 4-6-81 இல் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலை நடாத்துவதற்கு முடிவு எடுக்கப்பட்டது. தேர்தல் ஒழுங்குகள் முற்றாகச் செய்யப்பட்டிருந்த போதிலும் வெளித் தலையீடுகளால் அவற்றிற் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. அவசரகாலச் சட்டத்தின்கீழ் மக்களின் அச்சத்திற்கும், பரபரப்பிற்கும் நடுவேதான் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் வாக்கெடுப்புகள் ஆரம்பமாயின. அவசர கால விதிகளின்படியே அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. தேர்தல் ஆணையாளரின் அதிகாரங்கள் இச்சட்டத்தின் கீழே வலுவிழந்து போயிருந்தன. ஏற்கெனவே நியமிக்கப்பட்ட தமிழ்த் தேர்தல் உத்தியோகத்தர்களின் கடமைகள், தெற்கிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு அவசர அவசரமாகக் கைமாற்றப்பட்டது. இவர்களின் தராதரம் அறியப்படாமலே இவர்கள் கடமைக்கு அமர்த்தப்பட்டனர் என்பதும், தேர்தல் ஒழுங்கு முறையைப் பற்றி இவர்களிற் சிலர் எவ்வித பரிச்சயமுமற்றிருந்தனர் என்பதும் பின்னர் அம்பலமாயிற்று.[8]

அவசர காலச் சட்டத்தின் கீழ் ஏற்பட்ட இந்த மாற்றங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரது அதிகாரத்தோடு நடைபெற்றது. சர்வசன வாக்குரிமை கிடைத்து 50-வது வருட நிறைவினை இலங்கை முழுவதும் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருகையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் முறை மிகக் கேவலமாக அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்புக்குள்ளாக்கப்பட்டது. இதன்காரணமாகவே தேர்தல் அத்தாட்சி அதிகாரி திரு. யோகேந்திரா துரைசுவாமி, தேர்தல் சம்பந்தமாக பல நெறிமுறைகள் சரியான முறையில் நிறைவேற்றப்படாமையால் தேர்தல் முடிவுகளைத் தம்மால் 4-6-81 ஆம் திகதியன்றே வெளியிட முடியாதுள்ளதென்பது பற்றி உறுதியோடு அறிவித்தார்.[9] வாக்குச் சாவடிகளில் தேர்தல் வாக்கெடுப்பு, குறிப்பிட்ட நேரத்தில் ஆரம்பமாகவில்லை. பல இடங்களுக்கு வாக்குப் பெட்டிகள் அனுப்பப்படவில்லை. வாக்களிக்கப்பட்டபின் அந்தந்தத் தேர்தல் ஸ்தானங்களில் வாக்குகள் எண்ணப்படாமலே இடம் மாறுண்டு போயின.[10] இப்படி இடம் மாறுண்ட வாக்குப் பெட்டிகள் தேர்தல் அலுவலகத்திற்கு வந்து சேரவில்லை என்றும், சில வாக்குச் சீட்டுப் பெட்டிகள் யாழ்ப்பாண நகரின் ஹோட்டல் ஒன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டன என்றும் பின்னர் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. தேர்தல் அத்தாட்சி அதிகாரி இப்படியாகவே தன்னுடைய வழமையான சட்டங்களின்படி நடக்க முடியாத நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டார். தமிழர் விடுதலைக் கூட்டணி இதனைப்பற்றி பகிரங்கமாகவே அம்பலப்படுத்தியது. யாழ் மாவட்ட சபைத் தேர்தல் முடிவினை அடுத்து நடைபெற்ற கூட்டத்தில் நன்றி தெரிவித்துப் பேசிய மாவட்ட சபைத் தலைவர் திரு. சு. நடராசா பின்வருமாறு குறிப்பிட்டார்:- "...........ஸ்ரீ லங்காவின் சில அமைச்சர்களே யாழ்த் தேர்தல் அதிகாரியின் கடமையிற் தலையிட்டு, அவர் தமது கடமைகளைச் செய்யவிடாது தம் இஷ்டம்போலச் செய்ய முற்பட்டனர்."[11] இதனை எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் மேலும் வலியுறுத்திக் கூறியிருந்தார். "தேர்தல் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது ஜனநாயகத்தை அழிக்கும் வகையில் பொறுப்பு வாய்ந்த சில அமைச்சர்கள் தேர்தல் அத்தாட்சி அதிகாரியினதும், உதவித் தேர்தல் ஆணையாளரினதும் அதிகாரபூர்வமான கடமைகளிற் தலையிட்டிருந்தனர்."[12] அமைச்சர்கள் ஒருபுறமும், நெருக்கடி நிலை இன்னொரு புறமுமாயிருக்கையில் இத்தகைய தாறுமாறான சூழ்நிலையில் மேலும் சிக்கலை உண்டாக்கும் விதத்தில் தேர்தல் நெறிமுறைகள் சரியாக அனுஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிக்கப்படாமையால் தேர்தல் அத்தாட்சி அதிகாரி திரு. யோகேந்திரா துரைசுவாமி தேர்தலிற் போட்டியிட்ட கட்சிகள் பாராட்டும் விதத்தில் தேர்தலே அறிவிக்க முடியாதென முடிவெடுத்தமை முக்கியமான செயலாகிவிட்டது.

## யாழ்ப்பாணத்தை எரித்தவர்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிரந்தரமான மனக் காயத்தினையும், பொருட் சேதங்களேயும் ஏற்படுத்தியவர்கள் யார் என்பது பற்றி எவ்விதமான ஒளிவு மறைவும் இல்லே. இத்தகைய காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்களேயும், அழிவு வேலேகளேயும், உயிர்க் கொலேகளேயும் உண்டாக்கியவர்கள் யார் என்பதுபற்றி இப்போது விசாரணேகள் நடைபெற்றுக்கொண் டிருக்கின்ற போதிலும், இதன் மூலகர்த்தாக்கள் சம்பவ தினத்தன்றே அறியப்பட்டுவிட்டார்கள்.

9 ஆம் திகதி ஜூலாய் மாதம் பாராளு மன்றத்தில் யாழ்ப்பாண அசம்பாவிதங்கள் பற்றி விவாதிக்கப்பட்ட போது இந்த உண்மைகள் வெளியாயின. பாராளுமன்றத்திற் பேசிய எதிர்க்கட்சித் தலேவர் திரு. அமிர்தலிங்கம், துரையப்பா விளேயாட்டரங்கிற் தங்கியிருந்த 300 பேரே இச் செயல்களுக்கு முழுப் பொறுப்பென்று குற்றஞ்சாட்டினுர். அத்தோடு, "......... ... திரு. யோகேஸ்வரனின் வீட்டைப் பொலிசார் கொழுத்தியபோது வெளியிற் சில பொலிஸ் காரர்கள் துப்பாக்கியுடன் நின்றிருக்கின்றனர். இதன் பின்னர் அவர்கள் வாகனத்திற் சென்று தமிழர் விடுதலேக் கூட்டணியின் தலேமை நிலேயத்தைத் தகர்த்ததுடன் தீ வைத்தும் எரித்தனர். இச் சம்பவங்கள் தொடர்பாக அப்பொழுது கிழக்கு மாகாணத்தில் இருந்த நான் பொலிஸ் மா அதிபருடன் தொடர்பு கொண்டேன். என்னிடம் பேசிய அவர் பொலிஸ்காரர்கள் சுடப்பட்டதால் ஆத்திரமடைந்த மற்றைய பொலிஸ்காரர்கள் இப்படியான செயல்களில் இறங்கியிருக்கலாம் என்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் பொலிஸ் மா அதிபரும், பிரிகேடியர் வீர துங்காவும், மற்றும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளும் யாழ்ப்பாணத்தில் இருந்த சமயம் இரவில் துப்பாக்கிகள் சகிதமும், தீப்பந்தங்களுடனும் சென்ற பொலிஸ்காரர்கள் யாழ்ப்பாணம் நூலகத்திற்குத் தீ மூட்டியுள்ளார்கள்—[13] எனவும் குறிப்பிட்டார். இதேவிதமாக யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரனும், நல்லூர்த் தொகுதி உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரமும் இந்தச் சம்பவங்களுக்குப் பொலிசாரே காரணமென்றும், இச்செயலில் இவர்கள் முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்தார்கள் என்றும் கூறினர்—[14] அரசாங்கத்தின் சார்பில் இவற்றிற்குப் பதிலளித்துப் பேசிய காணி - காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசாநாயக்க, கடந்த காலங்களில் தமிழ்ப் பகுதிகளில் பொலிசார் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தமையும், ஏனைய பயமுறுத்தற் சம்பவங்களும் சேர்ந்து பொலிசாரை அதிருப்திக்கு உள்ளாக்கி இருந்ததென்றும், அதோடு தேர்தற் கடமைக்காக இங்கு வந்த பொலிசார் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேர்தற் பிரசாரக் கூட்டத்திற் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசார் சுட்டுக்கொல்லப்பட்டதாலும் ஆத்திரமடைந்தே இத்தகைய வன்முறையில் ஈடுபட்டனர் எனவும் குறிப்பிட்டார். இச்சம்பவத்தின் பின் மேற்படி இருநூறு பொலிசாரும் தங்கள் கடமையைவிட்டுச் சென்றுவிட்டார்களென அமைச்சர் குறிப்பிட்டார். அத்தோடு இந்தப் பிழைகளுக்கெல்லாம் நீங்களும் நாங்களுமே பொறுப்பெடுக்கவேண்டும் என்றும் அவர் கூறினார்—[15] இவ் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்ட பொலிசாருக்கெதிராக உயர்மட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்படுமென்றும் பின்னர் அரசாங்கம் அறிவித்தது.

## தேர்தல் முடிவுகளும் பின்னரும்

தேர்தல் முடிவுகளைக் கணக்கிட்டு வெளியிடும்படியும், இந்தத் தேர்தலினைத் தாங்கள் ஏற்றுக்கொள்வதாகவும், மாவட்ட சபையின் மூலம் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தமிழர் விடுதலைக் கூட்டணி மேற்கொள்ள உள்ளதாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் ஜனாதிபதியை வேண்டிக்கொண்டதன்பேரில் ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை அறிவிக்குமாறு 9-6-81 இல் தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்தார். இவ்விடயத்தைப்பற்றிப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் அவர் பின்வருமாறு தெரிவித்தார்:-

'' யாழ் மாவட்டசபைத் தேர்தல் வாக்களிப்பு விவகாரம் எனது கவனத்திற்குத் தேர்தல் ஆணையாளரால் கொண்டு வரப்பட்டது. யாழ் தேர்தல் அத்தாட்சி அதிகாரி, தேர்தல் ஒழுங்காக நடைபெறவில்லையென்று அறிக்கை சமர்ப்பித்திருந்தார். இந்த அறிக்கையுடன் தேர்தல் ஆணையாளர் தமது சிபாரிசு ஒன்றையும் என்னிடம் தந்திருந்தார். அவரது சிபார்சை ஏற்று நான் வாக்குகளை எண்ணிக் கணக்கிட்டுத் தேர்தல் முடிவுகளை அறிவிக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளேன். இந்தத் தேர்தலிற் போட்டியிட்ட தமிழ்க் காங்கிரஸ் கட்சியினரும், சுயேச்சைக் குழுவினரும் இந்தத் தேர்தல் ஒழுங்காக நடைபெறவில்லையென்று ஆட்சேபனை தெரிவித்திருந்தனர். காலையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் என்னைச் சந்தித்து இத் தேர்தல் விவகாரம் பற்றிப் பேசினார். தோதல் முடிவுகளைக் கணக்கிட்டு அறிவிக்குமாறு அவர் என்னிடம் கேட்டுக்கொண்டார்—[16].

9-6-81 இல் யாழ்ப்பாண மாவட்டம் உட்படத் தீவின் ஏனைய பகுதிகளிலும் அமுல் செய்யப்பட்டிருந்த அவசரகால நிலைமையும், பத்திரிகைத் தணிக்கையும் நீக்கப்பட்டன. எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் இத்தகைய சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது இவற்றைக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவருவது சம்பந்தமாக ஜனாதிபதியுடன் எவ்விதத் தொடர்பும் கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால், யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் முடிவுகளைக் கணக்கிட்டு அறிவிக்குமாறு அவர் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

31-5-81 இல் தொடங்கிய இந்தச் சீரழிவு வேலைகள் யாழ்ப்பாண மாவட்டத்தை உலுக்கி, அதன் அன்றாட இயக்கத்தையே பெரிதும் சீர்குலைத்திருந்தது. கொள்ளையிடல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீ வைப்பு ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்களின் செயற்பாடின்மை வியாபாரிகளையும், பொது மக்களையும் பெரிதும் பாதித்திருந்தது. எஞ்சியுள்ள வியாபார நிறுவனங்களின் உரிமையாளர்கள் தீ மூட்டலுக்கும், சூறையாடலுக்கும் பயந்து கடைகளை மூடியும், பொருட்களை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தியும் விட்டனர். சன நடமாட்டம் குறைந்து போக்குவரத்து நிலைமை மோசமடைந்தது. பிற இடங்களிலிருந்து வருகின்ற போக்குவரத்துச் சாதனங்களின் தொடர்பு தடைப்பட்டமையால் உணவு விநியோகம் சீர்குலையும் அபாயம் ஏற்பட்டது. இதனால் விநியோக சேவைகளும், சாப்பாட்டுக் கடைகளும் செயலற்றுப்போயிருந்தன. அலுவலக நடவடிக்கைகள், போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றைச் செப்பனிட வேண்டிய பெரும் பொறுப்பு மாவட்டத் தலைவரைச் சென்றடைந்தது. நிர்வாக நிலைமைகள்பற்றி அடிக்கடி மகாநாடுகளை நடத்தி அவற்றை மாவட்ட அமைச்சின் செயலாளரும், அரசாங்க அதிபரும் சீர் செய்துகொண்டிருந்த அதே வேளையிற் பொதுமக்களின் குறைபாடுகளைத் தீர்த்து வைக்கவேண்டிய பெரும்பணி அவர்களுக்கு உரியதாயிருந்தது. வர்த்தகர்களும் பொதுமக்களும் அவரைச் சந்தித்துத் தங்களுடைய பிரச்சனைகளைத் தீர்த்துவைக்கும்படி கேட்டுக்கொண்டிருந்தனர். நகரம் பழைய அமைதிக்குத் திரும்பவேண்டுமெனில் வர்த்தக நிறுவனங்கள் திறக்கப்படவேண்டியது அவசியமென்று உணரப்பட்டிருந்தது. இந்த வேளையில் தம்மைச் சந்தித்த வியாபாரிகள் தமக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் தரப்படின் தாம் கடைகளைத் திறக்க முடியும் என்பதனையும், தமது பொருளாதாரத் தேக்கத்தினையும் குறிப்பிட்டனர். இவற்றைக் கேட்டறிந்த திரு. யோகேந்திரா துரைசுவாமி பிறிகேடியர் வீரதுங்காவுடன் தொடர்புகொண்டு வியாபாரிகளும் அரசாங்க உயர் அதிகாரிகளும் சேர்ந்த மகாநாடு ஒன்றினை சுபாஸ் விருந்தினர் விடுதியில் கூட்டினார். அப்போதைய நிலைமைகள் இக்கூட்டத்திலே பரிசீலனை செய்யப்பட்ட பின்னர் பிறிகேடியர் வீரதுங்க உத்தரவாதமளித்ததன் பேரில் வியாபாரிகள் தமது கடைகளைத் திறந்து வியாபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத்தை ஆரம்பிக்க இணங்கினர். தீயினால் அழிந்துபோன கடைகளினது சேத விபரங்களைத் தனக்கு அறியத் தரும்படியும் அதற்கான நிவாரணத்தினைத் தாம் பெற்றுக்கொடுக்க முயற்சி செய்வதாயும் மாவட்ட அமைச்சின் செயலாளரும், அரசாங்க அதிபரும் குறிப்பிட்டதை வர்த்தகர்கள் ஏற்றுக் கொண்டனர். இதனைப் பின்வரும் செய்தி தெரியப்படுத்தும்.

''யாழ் மாவட்டத்திற் சேதமுற்ற கடைகளுக்கும், சொத்துக்களுக்கும் நஷ்டஈடு வழங்க ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதால், நஷ்டம் தொடர்பான விபரங்களைத் தனக்கு உடன் அறியத்தரும்படி யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும் அரசு அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி வேண்டுகோள் விடுத்தார். யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வியாபாரிகள் தங்களுடைய நிறுவனங்களைத் திறந்து வியாபாரம் செய்வதற்கு உத்தரவாதமான பாதுகாப்பில்லையென்ற காரணத்தால் கடைகள் திறக்க முடியாதிருப்பதாக அரசாங்க அதிபரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவர் பிறிகேடியர் வீரதுங்க உட்பட அரசாங்க உயர் அதிகாரிகளடங்கிய கூட்டமொன்றினை நடாத்தினர்.

இவ்வியாபாரிகள் எவ்வித அச்சமும் பயமுமின்றி வியாபாரத்தை மேற்கொள்ளவும், பழையபடி அமைதியும் சுமூகமான நிலைமையும் ஏற்படவும் தாம் உத்தரவாதம் அளிப்பதாக இக்கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டது. சுமார் எழுபதிற்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் வியாபாரிகள் தங்கள் பல பிரச்சனைகள் பற்றிக் கலந்துரையாடினர்.

சேதமுற்ற கடைகளுக்கு நஷ்டஈடு வழங்கவும், மாநகர சந்தையில் வியாபாரம் தொடங்கத் தற்காலிக ஏற்பாடுகள் மேற்கொள்ளவும் மாவட்ட அமைச்சின் செயலாளர் நடவடிக்கைகளை மேற்கொண்டு உதவவேண்டுமெனவும் வியாபாரிகள் கேட்டனர்.

மாநகர சந்தைப் பகுதியிற் சிறு கடைகள் வைத்து நடாத்தியவர்கள் தங்கள் வியாபாரத்தை உடன் ஆரம்பிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் விதத்தில் நடவடிக்கையைத் தனிப்பட்ட முறையிலும் மாநகர சபையுடன் தொடர்பு கொண்டும் மேற்கொள்ள உள்ளதர்கவும் அரச அதிபர் குறிப்பிட்டார் [17].

இந்த அடிப்படையில் மீண்டும் யாழ் மாவட்டம் தனது பழையநிலைக்கு வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதனை இப்போது அவதானிக்க முடிகின்றது.

**படிப்பினைகள்:**

இந்தக் காலப் பகுதியில் நடந்த சம்பவங்களினால் பல கோடி ரூபா வரை பொருட் சேதங்களும், ஆட் சேதங்களும் ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. இந்த இழப்புகளை விட இதன் மூலமாகத் தமிழ்ப் பேசும் இனம் பெற்ற அவமதிப்பு வெகு எளிதாக மறக்க முடியாததாகும். உலகப் பெருமையும், பாரம்பரிய சிறப்பும், கலாச்சார இறுமாப்பும் உள்ள தமிழ்ப் பேசும் இனம் இத்தகைய அவமானத்தை அடைந்ததையிட்டு உலகத் தமிழர்களும் நீதியின்பால் அக் கறையுள்ளவர்களும் நெஞ்சு கொதித்தமையை அவ்விடங் களில் நடைபெற்ற கிளர்ச்சிகள், பொதுக்கூட்டங்கள் வாயி லாக நாம் அறிய முடிந்தது. ஆயினும், இத்தகைய அவ மதிப்புக்கான காரணங்களை நாம் ஆராய்ந்து தேறவேண் டும். இதற்கான காரணம் தமிழ்ப்பேசும் இனத்தினுடைய சிந்தனை வளர்ச்சியில் உள்ளதா என்பதனை நாம் பரிசீலனை செய்துகொள்ள வேண்டியது தமிழரின் எதிர்கால வாழ்விக்கு பயன் தருவதாய் அமையும்.

யாழ்மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தல் முடிவுகள் வெளி யானபின்னர் வாக்களிப்பு வேளையில் நடைபெற்ற தில்லு முல்லுகள், ஊழல்கள் பற்றிப் பரவலாகவே விமர்சிக்கப் பட்டது. இந்த ஊழல்களையும், மோசடியின் உச்சத்தன்மை களையும் நீதிமன்ற வாயிலாக உலகறியச் செய்ய வேண்டு மென்ற அபிப்பிராயம் நீதியில் அக்கறையும் உரிமையில் நாட்டமுமுடையோர் மனதிலே எழுந்தது. இந்தச் சந்தர்ப் பத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் சட்டத் தரணியுமான திரு. மு. சிவசிதம்பரம் இத்தேர்தல் முடிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கெதிராகத் தமிழர் விடுதலைக் கூட்டணி வழக்குத் தொடரப்போவதில்லை என்றும், பொதுவாகவே வெற்றி பெற்ற கட்சிகள் இத்தகைய தேர்தல் ஆட்சேப மனுக்களைத் தெரிவிப்பதில்லை யென்றும் கூறினர்—[19].

இதேவேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கட்டுப் பாட்டினுள்ளே செயற்படுகின்ற யாழ் மாநகராட்சி மன்றம் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் வாக்களிப்பின் போது சட்டவிரோதமான பல செயல்கள், அதிகார துஷ் பிரயோகம் என்பன நடைபெற்றிருப்பதாகவும் இதனை விசாரிப்பதற்குச் சர்வதேச ரீதியிலான விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்படவேண்டும் என்னும் தீர்மானத்தை ஏக மனதாக நிறைவேற்றியுள்ளது—[20]

தமிழர் விடுதலைக் கூட்டணி நடத்திய உண்ணுவிரத நிகழ்ச்சியொன்றின்போது, வெளிநாட்டு இராஜதந்திரிகள் யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. யோகேஸ்வரனிடம், ''இவ்வளவு அட்டூழியங்களும் நடந்துகொண்டிருந்தபோது, உங்கள் இளைஞர்கள் என்ன செய்தார்கள்?'' என்று கேட்ட போது, அவர், ''எங்கள் இளைஞர்களிடம் ஆயுதம் எதுவும் இல்லையே'' என்று தெரிவித்ததாகப் பத்திரிகைச் செய்திகள் மூலம் உணரமுடிகிறது.

ஆரம்பத்திலே கொழும்பு நகரில் ஏற்பட்ட இனக் கல வரங்கள் படிப்படியாக யாழ் நகர்வரை வந்து தமிழ்பேசும் மக்கள் தமிழ்ப் பிரதேசத்திலேயே தங்களுடைய உயிரையும் உடமைகளையும் இழக்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. 1956, 58, 61, 77ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இனக்கலவரங் களுக்கான பின்னணிகளை மக்கள் மறந்துவிடவில்லை. 1981-ம் ஆண்டுச் சம்பவங்கள் உக்கிரத்தன்மை அடைந்துள்ள தென்ப தனை இக்காலத்துச் சம்பவங்கள் தெளிவாகவே நமக்கு அறி வுறுத்துகின்றன. கடந்த கால் நூற்றுண்டு காலமாக இச் சம்பவங்கள் மிக மோசமான முறையிற் தொடர்கின்றன. இவ்வளவு காலமாக இந்தப் பிரச்சினைக்குச் சரியான தீர்வு காணப்பட வழி அறியப்படவில்லை. இதே நிலைமை தொட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத்தான் வேண்டுமா இதற்கு மாற்றுவழி இல்லையா என்பது பற்றிப் பொதுமக்கள் இப்போது சிந்திக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

தீர்க்கமற்ற சிந்தனையுடனும், வெறும் சுலோகங்களின் அடிப்படையில் மட்டும் கொள்கைகளை அமையாது, நடைமுறைச் சாத்தியமான வழிவகைகளைத் தெரிவிக்கின்ற ஸ்தாபனம் ஒன்று தமிழர் மத்தியில் இதுகாலவரையும் உருவாகாதிருந்தமையே இப்பிரச்சினைக்கு மூலகாரணமென்பதனை நன்றாக யோசிப்பவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். அப்படி ஒரு நிறுவனத்தின் தேவையே இன்று வேண்டப்படுகின்றது. இது மக்களினது சுபீட்சத்திற்கு வழிகாட்டுகிற ஆரோக்கியமான ஒரு கட்சியாக இருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எடுத்தாளப் பெற்றவை

1. வீரகேசரி
2. வீரகேசரி
3. வீரகேசரி
4. தினபதி
5. வீரகேசரி
6. வீரகேசரி
7. உறன்சாட் அறிக்கை 9-6-81 தொகுதி 15 இலக்கம் 1 பக்கம் 100
8. வீரகேசரி
9. வீரகேசரி
10. வீரகேசரி
11. சுதந்திரன் 24-6-81 பக்கம் 2
12. கன்சாட் அறிக்கை 24-6-81 தொகுதி 15 இல. 1 பக்கம் 90
13. வீரகேசரி
14. கன்சாட் அறிக்கை 9-6-81 தொகுதி 15 இல. 1 விவாதம்
15. கன்சாட் அறிக்கை 9-6-81 தொகுதி 15 இல. 1 பக்கம் 95, 46
16. வீரகேசரி
17. வீரகேசரி
18. ஈழநாடு
19. வீரகேசரி
20. வீரகேசரி

339·P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org